பொருளடக்கம்

*

குகைவாசிகள் கொள்கைப் பாதை / 7

குகைவாசிகள் பதிப்பகப் பாதை / 16

முன்னுரை / 21

1 ஸலஃபுகள் என்றால் யார்? / 23

2 ஸலஃபிய்யா என்பது என்ன? / 27

3 ஸலஃப் என்ற வார்த்தை எப்போது
யாரால் உருவாகியது? / 30

நான் ஒரு ஸலஃபீ என்று ஒரு முஸ்லிம்
அடையாளப்படுத்தலாமா? / 31

4 ஸஹாபா பெருமக்கள்தான் அஹ்லுஸ்
ஸுன்னாவின் தராசு / 33

5 ஸலஃபுடைய விளக்கத்தின் முக்கியத்துவம் / 36

6 ஸஹாபாக்களின் கூற்றுகளைத் தொகுப்பதில் உலமாக்கள்
கொடுத்த முக்கியத்துவம் / 49

ஸஹாபா விளக்கங்களை எடுப்பதற்கான ஆதாரங்கள் / 50

7 ஸலஃப் ஒரு நடுநிலை சமுதாயம் / 59

1. அல்லாஹ்வின் பெயர் மற்றும் பண்புகளில்
ஸலஃபின் நடுநிலை / 61

2. அல்லாஹ்வை மறுமையில் பார்க்கும் விசயத்தில்
ஸலஃப்களின் நடுநிலை / 63

3. ஈமானுடைய விசயத்தில் ஸலஃப்களின் நடுநிலை / 64

4. பெரும்பாவங்கள் செய்பவர்களின் நிலைப்பாட்டைப் பற்றிய
ஸலஃப்களின் நடுநிலை / 66

5. விதியுடைய விசயத்தில் ஸலஃப்களின் நடுநிலை / 66

6. ஸஹாபாக்களின் விசயத்தில் ஸலஃப்களின் நடுநிலை / 67

8 ஸலஃப்களைப் பின்பற்றுவதின் பயன்கள் / 70

9 ஸஹாபாக்கள் மீதான விமர்சனங்களும் பதில்களும் / 72

2. 'வஹ்யி மட்டும்தானே மார்க்கம்?' என்ற வாதம் / 76

3. 'காலம் மாறும்போது விளக்கமும் மாறும்தானே?' என்ற வாதம் / 80

4. 'நபித்தோழர்களும் பித்அத் செய்தார்களே?' என்ற வாதம் / 81

10 நபித்தோழர்கள் விளக்கத்தின் முக்கியத்துவம் / 83

1

ஸலஃபுகள் என்றால் யார்?

*

سَلَفَ يَسْلُفُ سَلَفًا سُلُوفًا

ஸலஃப (سَلَفَ) எனும் வார்த்தை எஸ்லுஃபு (يَسْلُفُ) என்ற வார்த்தையிலிருந்து பிறக்கிறது. ஸலஃப் (سَلَفٌ) என்ற வார்த்தை முன்சென்றவர்கள் என்கின்ற அர்த்தத்தைக் கொடுக்கும்.

இமாம் இப்னு மன்தூர் ﵀ கூறுகிறார்கள்: ஸலஃப் என்பது முன்சென்றவர்களைக் குறிக்கும். அல்லாஹ்[3] கூறுகிறான்:

فَجَعَلْنَاهُمْ سَلَفًا وَمَثَلًا لِلْآخِرِينَ

அவர்களை (அழித்து) சென்றுபோன மக்களாக்கி (அவர்களுடைய வரலாற்றைப்) பிற்காலத்தில் உள்ளவர்களுக்கு உதாரணமாக்கினோம். (குர்ஆன் 43:56)

எனவே, ஸலஃப் என்றால் மொழிரீதியான அர்த்தம்: கடந்து சென்றவர்கள், முன்சென்றவர்கள்.

பயன்பாட்டுரீதியான அர்த்தம்: அனைத்து உலமாக்களாலும் ஸலஃப் என்கின்ற வார்த்தை பின்வருமாறு அறிமுகப்படுத்தப்படுகிறது.

ஸலஃப் என்றால் ஸஹாபா எனும் நபித்தோழர்கள், அவர்களைப் பின்பற்றிய அடுத்த தலைமுறையான தாபிஈன் மற்

3 அல்லாஹ் (ﷻ): படைப்புகள் வணங்குவதற்கும் கீழ்ப்படிவதற்கும் தகுதியான இறைவன் என்று பொருள். ஒவ்வொரு மொழியிலும் இறைவனைக் குறிப்பிடச் சொல்லப்படும் பொதுச்சொல் போல அறபுமொழியிலும் இதை அறபுக் கிறித்துவர்களும் யூதர்களும் பயன்படுத்தி வருகிறார்கள். எனினும், உண்மையில் இது வெறுமனே ஓர் அறபுச்சொல் அல்ல. அதையும் தாண்டி இறைவன் தனக்குத்தானே சூட்டிக்கொண்ட மிக அழகிய பெயர். அனைத்தையும் படைத்து பரிபாலிக்கும் ஒரே இறைவனை மட்டுமே இது குறிக்கும்.

3

ஸலஃப் என்ற வார்த்தை எப்போது யாரால் உருவாகியது?

*

நபி ﷺ அவர்கள் நோய்வாய்ப்பட்டிருந்த இறுதிநேரத்தில் ஃபாத்திமா ؓ அவர்களுக்கு ஆறுதல் கூறினார்கள்:

وَإِنَّكِ أَوَّلُ أَهْلِي لُحُوقًا بِي وَنِعْمَ السَّلَفُ أَنَا لَكِ

ஃபாத்திமாவே! நீதான் எனது குடும்பத்தாரில் முதலில் என்னை சந்திக்கக்கூடியவர். நான் உனக்கு ஒரு சிறந்த முன்மாதிரி (ஸலஃப்) என்று கூறினார்கள். (அறிவிப்பு: ஆயிஷா ؓ, முஸ்லிம் 2450)

وَكُلُّ خَيْرٍ فِي اتِّبَاعِ مَنْ سَلَفْ وَكُلُّ شَرٍّ فِي ابْتِدَاعِ مَنْ خَلَفْ

எல்லா நன்மையும் ஸலஃப்களைப் பின்பற்றுவதிலே இருக்கிறது. எல்லாத் தீங்கும் பிற்காலத்தவர்களைப் பின் தொடர்ந்து புதிதாக உருவாக்குவதிலே இருக்கிறது.

ஸலஃபுகளைக் குறிக்கும் பெயர்கள்

1. அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ (اَهْلُ السُّنَّةِ وَالْجَمَاعَةِ) – நபி வழியையும் நபித்தோழர்களின் கூட்டமைப்பையும் சேர்ந்தவர்கள்
2. ஸலஃப் (سَلَفٌ) – முன்சென்றவர்கள்
3. ஸலஃபிய்யா (سَلَفِيَّةٌ) – முன்சென்றவர்களாகிய நபித்தோழர்களின் கொள்கைப் பாதை
4. அஹ்லுல் அஸர் (اَهْلُ الْاَثَرِ) – நபிவழியை விளக்கும் நபித்தோழர்களின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுவோர்
5. அஹ்லுல் ஹதீஸ் (اَهْلُ الْحَدِيْثِ) – நபியின் சொல், செயல், அங்கீகாரத்தைப் பின்பற்றுவோர்

5

ஸலஃபுடைய விளக்கத்தின் முக்கியத்துவம்

*

ஸலஃப்களைப் பின்பற்றுவதும் அவர்களிடமிருந்து கிடைக்கப் பெற்றுள்ள விளக்கங்களை ஏற்றுக்கொள்வதும் மிக முக்கியத் துவம் கொண்டதாகும்.

குர்ஆன் தெளிவாக இறக்கப்பட்டுள்ளது

அல்லாஹ் ஸுப்ஹானஹு வதஅலா அனைத்திற்கும் விளக்க மாக இந்தக் குர்ஆனை இறக்கினான்.

وَنَزَّلْنَا عَلَيْكَ الْكِتَابَ تِبْيَانًا لِكُلِّ شَيْءٍ

(நபியே!) ஒவ்வொரு விசயத்தையும் தெளிவாக விவரிக் கக்கூடிய இவ்வேதத்தை நாம்தாம் உம்மீது இறக்கி இருக் கின்றோம். (குர்ஆன் *16:89*)

وَلَكِنْ تَصْدِيقَ الَّذِي بَيْنَ يَدَيْهِ وَتَفْصِيلَ كُلِّ شَيْءٍ وَهُدًى وَرَحْمَةً لِقَوْمٍ يُؤْمِنُونَ

ஆனால், அவர்களிடமுள்ள வேதத்தை உண்மையாக்கி வைத்து ஒவ்வொரு விசயத்தையும் விவரித்துக் கூறுவதாக இருக்கின்றது. மேலும், அல்லாஹ்வை நம்பிக்கை கொண்ட வர்களுக்கு நேரான வழியாகவும் ஓர் அருளாகவும் இருக் கின்றது. (குர்ஆன் *12:111*)

الر كِتَابٌ أُحْكِمَتْ آيَاتُهُ ثُمَّ فُصِّلَتْ مِنْ لَدُنْ حَكِيمٍ خَبِيرٍ

அலிஃப்; லாம்; றா. (இதுதான் அல்லாஹ்வின்) வேத நூல். அனைத்தையும் நன்கறிந்த ஞானவானால் இதன் வசனங்கள் (பல ஆதாரங்களைக்கொண்டு) உறுதி செய்யப்பட்ட பின்னர் (தெளிவாக) விவரிக்கப்பட்டுள்ளன. (குர்ஆன் *11:1*)

وَمَا أَرْسَلْنَا مِنْ رَسُولٍ إِلَّا بِلِسَانِ قَوْمِهِ لِيُبَيِّنَ لَهُمْ

6

ஸஹாபாக்களின் கூற்றுகளைத் தொகுப்பதில் உலமாக்கள் கொடுத்த முக்கியத்துவம்

*

தாபிஈன்களிலிருந்து இன்று வரை உள்ள உலமாக்கள் ஸஹாபாக்களின் கூற்றுகளைத் தொகுப்பதில் மிகவும் முக்கியத்துவம் அளித்துள்ளார்கள்.

ஸாலிஹ் இப்னு கய்ஸான் ﵀ கூறுகிறார்கள்: நானும் இமாம் ஸுஹ்ரீயும்[9] கல்வியைத் தேடிக்கொண்டிருந்தோம். நாங்கள் நபி ﷺ அவர்களின் ஸுன்னாக்களை எழுதினோம். அப்போது இமாம் ஸுஹ்ரீ ﵀ அவர்கள் கூறினார்கள்: நாம் ஸஹாபாக்களின் கூற்றுகளையும் எழுதுவோம். ஏனென்றால், அது ஸுன்னா ஆகும் என்றார். (முஸன்னஃபு அப்திர் ரஸ்ஸாக்)

ஸஹீஹ் இப்னு ஹிப்பான், ஸஹீஹ் இப்னு ஹுஸைமா, ஸஹீஹ் புகாரீ, முஸ்லிம் மற்றும் ஸுனன் அபீ தாவூத், திர்மிதீ, நஸாயீ போன்ற புத்தகங்களிலும், மேலும் முஸ்னது அப்துர் ரஸ்ஸாக், முஸ்னது அஹ்மது போன்ற புத்தகங்களிலும் ஸஹாபாக்களின் கூற்றுகள் தொகுக்கப்பட்டுள்ளன. அவர்களின் சொல், செயல்களும் பதியப்பட்டுள்ளன.

அகீதா சம்பந்தமான புத்தகங்களிலும் மற்றும் முஹம்மது இப்னு அப்துல்லாஹ் புகாரீ ﵀ அவர்களுடைய ஆசிரியர் அபூ தாவூத், அபூ பக்ரி அஸரம், ஹர்ப் அல்கர்மானா, உஸ்மான் இப்னு ஸயீத், அத்தாரிமீ, இப்னு அபீ ஹாதிம்,

9 அபூபக்ர் முஹம்மது இப்னு முஸ்லிம் இப்னு ஷிஹாப் அஸ்ஸுஹ்ரீ ﵀ ஆகிய இவர்கள், ஹிஜ்ரீ 58இல் முஆவியா ﵁ ஆட்சிக்காலத்தில் மதீனாவில் பிறந்தார்கள். பின்னர் சிரியாவில் குடியேறினார்கள். சுமார் பத்து நபித்தோழர்களைப் பார்த்துள்ள இவர்கள், நம்பத் தகுந்த ஹதீஸ் அறிவிப்பாளராக விளங்கினார்கள். ஹிஜ்ரீ 124 றமளானில் மரணித்தார்கள்.

1. அல்லாஹ்வின் பெயர் மற்றும் பண்புகளில் ஸலஃபின் நடுநிலை

ஸஹாபாக்களுக்குப் பிறகு சில பிரிவுகள் வந்தார்கள் அவர்களை மூன்று பிரிவுகளாக வகைப்படுத்தலாம்.

1. மறுப்பவர்கள் (اَهْلُ التَّعْطِيْلِ)
2. உதாரணப்படத்துபவர்கள் (اَهْلُ التَّمْثِيْلِ)
3. சரியான பாதை உடையவர்கள் (اَهْلُ سُوْءِ السَّبِيْلِ)

1. மறுப்பவர்கள் (اَهْلُ التَّعْطِيْلِ)

சில பிரிவினர் அல்லாஹ்வுடைய அனைத்துப் பெயர்களையும் பண்புகளையும் மறுப்பார்கள். இன்னும் சில பிரிவு, சிலவற்றை மறுத்து சிலவற்றை ஏற்றுக்கொள்வார்கள். இன்னும் சிலர் பண்புகளை மட்டும் மறுப்பார்கள்.

ஜஹ்மிய்யா (الجهمية)

இவர்கள் ஜஹ்ம் இப்னு ஸஃப்வான் என்பவனைப் பின் பற்றுவார்கள். முதல் நூற்றாண்டின் இறுதி மற்றும் இரண் டாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தோன்றினார்கள். இப் பிரிவு அல்லாஹ்வுடைய அனைத்துப் பெயர்களையும் பண்புகளையும் மறுத்தார்கள். அல்லாஹ் பேசமாட்டான், சிரிக்கமாட்டான், முதல் வானத்திற்கு இறங்கி வரமாட்டான் என்று கூறுவார்கள். மேலும், அல்லாஹ்வுடைய வேதமாகிய அல்குர்ஆன் அல்லாஹ்வுடைய பேச்சு அல்ல என்பதாகக் கூறுவார்கள்.

அபூ நயீம் இப்னு ஹம்மாத் ﷺ அவர்கள் கூறுவார்கள்: அல்லாஹ்வுக்கு உதாரணம் கற்பிப்பவர்கள் சிலையை வணங்கு கிறார்கள். அல்லாஹ்வின் பண்புகளை மறுப்பவர்கள் ஒன்றும் இல்லாததை வணங்குகிறார்கள். (முன்ததா அகீததி அஹ்லிஸ் ஸுன்னதி வல் ஜமாஆ)

முஅதஸிலா (الْمُعْتَزِلَةُ)

இவர்கள் இரண்டாம் நூற்றாண்டின் இறுதியில் தோன்றியவர் கள். வாஸில் இப்னு அதா என்பவரைப் பின்பற்றக்கூடியவர்

இமாம் குர்துபீ ﷺ அவர்கள் கூறுகிறார்கள்: பின்வந்த கத்ரியாக்கள் இப்படிப்பட்டக் கூற்றைச் சொல்லவில்லை. (ஃபத்ஹுல் பாரீ)

இன்னும் சிலர் படைப்பினங்களின் செயல்களை அவர்களேதான் படைத்துக்கொள்கிறார்கள். அல்லாஹ் படைக்கவில்லை என்பதாகக் கூறுகிறார்கள்.

ஸலஃபுகளின் நடுநிலையானக் கூற்று

அனைத்தையும் அல்லாஹ் அறிவான். ஒரு விசயம் நடைபெறுவதற்கு முன்னாலும் சரி அல்லது எந்த ஒரு விசயமாக இருந்தாலும் அது அல்லாஹ்வின் நாட்டத்தின் அடிப்படையிலே நடக்கும்.

وَعِنْدَهُ مَفَاتِحُ الْغَيْبِ لَا يَعْلَمُهَا إِلَّا هُوَ وَيَعْلَمُ مَا فِي الْبَرِّ وَالْبَحْرِ وَمَا تَسْقُطُ مِنْ وَرَقَةٍ إِلَّا يَعْلَمُهَا وَلَا حَبَّةٍ فِي ظُلُمَاتِ الْأَرْضِ وَلَا رَطْبٍ وَلَا يَابِسٍ إِلَّا فِي كِتَابٍ مُبِينٍ

மறைவானவற்றின் சாவிகள் அவனிடமே இருக்கின்றன. அவற்(றில் உள்ளவற்)றை அவனைத் தவிர வேறு எவரும் அறியமாட்டார். நிலத்திலும் நீரிலும் உள்ளவற்றையும் அவன் நன்கறிவான். அவன் அறியாமல் எந்த ஓர் இலையும் உதிருவதில்லை. பூமியின் (ஆழத்தில்) அடர்ந்த இருள்களில் (புதைந்து) கிடக்கின்ற (கடுகு போன்ற சிறிய) விதையும், பசுமையானதும், உலர்ந்ததும் அவனுடைய தெளிவான (பதிவுப்) புத்தகத்தில் இல்லாமலில்லை. (குர்ஆன் 6:59)

6. ஸஹாபாக்களின் விசயத்தில் ஸலஃபுகளின் நடுநிலை

கவாரிஜ் போன்ற வழிகெட்டப் பிரிவுகள் கூறுவார்கள்: 'உஸ்மான் ﷺ, அலீ ﷺ போன்றவர்கள் காஃபிர்கள் ஆகிவிட்டார்கள். ஏனென்றால், அவர்கள் அல்லாஹ் இறக்கியதின் அடிப்படையில் ஆட்சி செய்யவில்லை. எனவே, அவர்கள் காஃபிர்கள்.'

இந்த நபித்தோழர்களைக் குறித்து நபி ﷺ அவர்களே சொர்க்கத்தைக்கொண்டு சுபச்செய்தி சொல்லியிருக்க, இந்த வழிகெட்ட பிரிவுகள் (கவாரிஜ்) இவ்வாறு கூறுகிறார்கள்.

9

ஸஹாபாக்கள் மீதான விமர்சனங்களும் பதில்களும்

*

தமிழ்நாட்டில் அண்மைக் காலமாக நபித்தோழர்களை விமர்சிப் பதின் மூலம் தங்கள் சுயக்கருத்துகளை மார்க்கமாகப் பிரச்சாரம் செய்வோர் உருவாகியுள்ளார்கள். குர்ஆன் ஸுன்னாவை அதன் தூய வடிவில் சொல்கிறோம் எனக் கூறும் இந்த மக்கள், அவர்களின் வழிகேடான கொள்கைகளுக்கும் விளக்கங் களுக்கும் நபித்தோழர்களின் நிலைப்பாடுகள் எதிராக இருப் பதைப் பார்க்கும்போது, தங்கள் கருத்தைச் சத்தியம் என்று நிலைநாட்ட நபித்தோழர்களின் புரிதலை அசத்தியம் என்று பேசத் தொடங்கிவிட்டார்கள். இதைப் பாமர மக்களிடம் எளிதாகக் கொண்டு செல்ல அவர்கள் முன்வைக்கின்ற சில வாதங்களையும் அதற்கான பதில்களையும் இங்குச் சுருக்க மாகக் காணுவோம்.

1. 'அவர்களும் மனிதர்கள்தானே? ஏன் பின்பற்ற வேண்டும்?' என்ற வாதம்

'அவர்களும் மனிதர்கள்தாம்; நாமும் மனிதர்கள்தாம். அத னால் அவர்களைப் பின்பற்றத் தேவையில்லை' என்ற வாதத்தை முன்வைத்து நபித்தோழர்களை விமர்சிக்கிறார்கள்.

கவாரிஜ் கூட்டத்தார் குர்ஆன் வசனத்தை முன்வைத்து தங்கள் அசத்தியக் கொள்கையை நியாயப்படுத்தியபோது அவர்களி டம் அலீ ﷺ அவர்கள் கூறிய ஒரு வாக்கியத்தையே இங்கு முதலில் பதிலாகச் சொல்ல வேண்டும்.

قَالَ عَلِيٌّ: كَلِمَةُ حَقٍّ أُرِيدَ بِهَا بَاطِلٌ

10

நபித்தோழர்கள் விளக்கத்தின் முக்கியத்துவம்

*

மார்க்கம் என்றால் குர்ஆன், ஹதீஸ் மட்டும்தான் என்பவர்கள் நபித்தோழர்களின் விளக்கம் எவ்வளவு முக்கியம் என்பதைக் குறித்துச் சரியாகப் புரியாமலே இருக்கிறார்கள். அவர்களிடம் நபித்தோழர்களின் விளக்கங்களையும் ஏற்றுக்கொள்ளுங்கள் என்று கூறினால், 'என்ன, நீங்கள் குர்ஆன், ஹதீஸுடன் மூன்றாவதாக நபித்தோழர்களையும் எடுத்துக்கொள்கிறீர்களே? நபியவர்கள் இரண்டை விட்டுச் செல்கிறேன் என்றுதானே கூறினார்கள்?' எனக் கேட்கிறார்கள்.

இதற்குரிய பதில்: அஸ்ஸலஃபுஸ்ஸாலிஹ் விளக்கங்களை மார்க்கமாக ஏற்றுக்கொள்வது மார்க்கத்தில் புதிய கொள்கையை நுழைப்பதாக ஆகாது. குர்ஆன், ஹதீஸ் எனும் இரண்டுடன் மூன்றாவதாக ஒன்றை அதிகப்படுத்தியதாக ஆகாது. ஏனெனில், அஸ்ஸலஃபுஸ்ஸாலிஹ் விளக்கங்களை ஏற்றுக்கொள்ளும்படிக் கட்டளையிடுவதே குர்ஆன், ஹதீஸ்தான். இவ்விரண்டும் அவர்களைப் பின்பற்றும்படிக் கட்டளையிடுகின்றன. அதாவது, குர்ஆனையும் ஹதீஸையும் அவர்கள் எப்படி விளங்கியிருந்தார்களோ, அவ்வாறே பின்பற்றும்படிக் கட்டளையிடுகின்றன. அப்படியானால் அவர்களின் விளக்கங்களுக்கு ஏற்ப மார்க்கத்தைப் புரிவது அவசியமாகிறது. அவற்றுக்கு மூரணாக, புதிய விளக்கங்களை குர்ஆன், ஹதீஸுக்குக் கூறினால், அவை மார்க்கமாக மூடியாது. குழப்பங்கள்தான் மிஞ்சும். குர்ஆனையும் ஹதீஸையும் சரியாக விளங்குவதற்கு நபித்தோழர்களின் விளக்கம் தேவையில்லை என்பவர்கள் சில விசயங்களைக் கவனிக்கத் தவறிவிடுகிறார்கள்.